# திராவிடன்

ஆசிரியர் : என். வி. என்.


# காமராசர்-லால்பகதூர் பலப்பரிட்சை?

## திட்டத்துக்கு மாற்றுத் திட்டம்


காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த காமராசர் பிரமாதமான திட்டம் தந்திருக்கிறார் என்று காங்கிரஸ் வட்டாரத்தினர் உண்டாக்கி வரும் பரபரப்பு வரவர பிசுபிசுத்துவிட்டது! குறிப்பாக காங்கிரஸ் கூடாரத்திலேயே அதற்கு எதிர்ப்புக் கிளம்பி விட்டது.

நாடெங்கும் நடைபெற்ற பாராளுமன்ற — சட்டமன்ற இடைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கும்— ஆட்சிக்கும் ஏற்பட்ட படுதோல்விகளைக் கண்டு காங்கிரஸ் மேலிடம் அதிர்ச்சியடைந்து விட்டது. குறிப்பாக இத்தோல்விகளைப் பற்றி உலக நாடுகளில் கேலி செய்வதைப் பற்றி நேரு மிக்க கவலை கொண்டவரானார். தமது தலைமையில் மக்களுக்கு நம்பிக்கையில்லையென்பது வெட்டவெளிச்சமாகி விட்டதேயென்று ஏக்கங் கொண்டார். அதேபோல தமிழகத்தில் 1962ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் அடுத்து நடைபெற்ற திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத்தேர்தல் திருவண்ணாமலை சட்டமன்ற இடைத் தேர்தல் ஆகியவைகளிலும் தி. மு. கழகத்திடம் காங்கிரசுக்கு ஏற்பட்ட படு தோல்விகளைக் கண்ட காமராசரும் கண் கலங்கினார். தமது தேர்தல் ஸ்டண்டு வேலைகள் இனி நாட்டில் செல்லுபடியாகாது. அதிலும் தி. மு. கழகத்தை அசைக்க முடியாது என்பதை உணர்ந்தார். இதைப்பற்றியெல்லாம் மக்கள் பேசிக் கொள்வதைக் கேட்டு பதவியிலிருந்து வெளியேறவும் எண்ணினார். அத்துடன் அடுத்த பொதுத் தேர்தலில் தி. மு. க. வை ஒரு கை பார்த்து விடுவதென்றும் அதற்காக வெளியே யிருந்து கட்சியைப் பலப்படுத்துவதென்றுகூட திட்டமிட்டிருக்கிறாராம். ஆக இவைகளையெல்லாம் எண்ணியெண்ணி குழம்பிப் போயிருந்த காமராசருக்கு உடனே பதவியிலிருந்து எப்படியாவது வெளியேறிவிட வேண்டுமென்றும், அதன் மூலமாகத் தோல்விப் படலத்தை மறைத்து விடலாமெனத் துடிதுடித்துக் கொண்டிருந்தாராம்!

இந்நிலையில் பண்டித நேருவின் தலைமைக்கும் அதைவிட நெருக்கடி ஏற்படவே காமராசர் இதுதான் சமயமென்று தமது திட்டத்தைக் கூற நேருவும் சம்மதம் தெரிவித்தாராம்!

என்றாலும் காங்கிரசிலுள்ள மற்ற தலைவர்களுக்கு காமராசரின் திட்டம்பிடிக்கவில்லையாம், அதை வெளிப்படையாகச் சொல்லவும் முடியவில்லையாம்! காமராசர் தமது மாநிலத்தில் தி. மு. கழகத்திடம் தோல்வி அடைந்தால் அதற்கு நாமெல்லாம் பலியாக வேண்டுமா யென்று லால்பகதூர் சாஸ்திரி போன்றவர்கள் கூட

(6-ம் பக்கம் பார்க்க)



○

நம் அண்ணாவின் செல்வங்கள்

மணமக்கள்

செல்வன் பரிமளம்
செல்வி சரோஜா

செல்வன் இளங்கோவன்
செல்வி விஜயலட்சுமி

அறிஞர் அண்ணா—அண்ணி
கௌதமன்
ஆகியோர்.

1—9—63 அன்று காஞ்சியில் நடைபெற்ற திருமண விழாவின்போது எடுக்கப்பட்ட படம்.

○



# பல்கலைக் கழகங்கள் மீதும் டெல்லி ஆதிக்கமா?

## இந்தியைத் திணிக்க மறைமுக ஏற்பாடா?

## கல்வியின் அடிப்படைக் கொள்கைகள் சீரழிக்கப்படுவதா?

### டாக்டர் ஏ. லட்சுமணசாமி கண்டனம்

○

"உயர் கல்வித் துறையில் இப்போது ஆபத்தான போக்குகள் காணப்படுகின்றன. இந்தப் போக்குகள் நீடித்துவந்தால் பல ஆண்டுகளாக இருந்துவரும் பல்கலைக்கழகங்களின் எதிர்காலம் மோசமாகிவிடும்!

கல்வித் துறையை அரசாங்கத்தின் ஆதிக்கத்துக்கு உட்படுத்தினாலன்றி முன்னேற்றம் இராது. என்று அரசியல் வட்டாரங்களில் ஒரு கருத்து நிலவுகிறது. எல்லாப் பல்கலைக்கழகங்களையும் மத்திய ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர சிறிது காலமாகவே ஒரு துடிப்பு காணப்படுகிறது.

பல்கலைக்கழகங்கள்மீது ஆதிக்கம் பெறுவதன் மூலம் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் பொதுப் பாடமொழியைப் புகுத்தலாம் என்பது மத்திய அரசின் நம்பிக்கையாக இருக்கக்கூடும்.

மத்திய அரசுத் துறையில் சிலவற்றில் காணப்படும் போக்குகளைக்கொண்டுபார்த்தால் அந்தப் பொதுப் பாடமொழி எதுவாயிருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்தக் கட்டத்தில் இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்ருல், எந்தத் திசையில் மத்திய அரசு சிந்தனை செய்து கொண்டிருக்கிறது என்பதை மாநில அரசுகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்"

உயர் கல்வித்துறையில் மத்திய அரசாங்கத்தின் பொறுப்புகள் தொடர்பான அரசியல் சட்டவிதிகளை ஆராய்வதற்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்படுவதைக் கண்டித்துப் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது :—

நியமிக்கப்பட இருக்கும் இக்குழுவின் அறிக்கை எப்படியிருக்கும் என்பதை முன்கூட்டி அறிவது கடினமல்ல.

பல்கலைக் கழகங்களை மத்திய அரசின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்பதும் குழுவின் ஆய்வுக்குரிய விவகாரங்களில் ஒன்ருக இருக்கும். இந்த விவகாரத்தின் அரசியல் அம்சங்கள் குறித்து நான் பேச விரும்பவில்லை.

பல்கலைக் கழகங்களை மத்திய அரசின் பட்டியலின்கீழ் கொண்டுவருவது ஒருபுறமிருக்கட்டும்; அதைப் பொதுப் பட்டியலின்கீழ் கொண்டுவர மறுத்து விட்டு, மாநில அரசின் பட்டியலின்கீழ், அரசியல் சட்ட அமைப்பாளர்கள் நன்ருகச் சிந்தித்த பிறகே வைத்திருக்கிருர்கள். இதன் விளைவுகள் பற்றித் தெரியாமலா அப்படிச் செய்திருப்பார்கள் என்று கேட்கிறேன்.

பல்கலைக்கழகங்களுடன் எந்த எந்தவகையிலும் தொடர்பில்லாமல், 'மத்திய கல்வி நிறுவனங்கள்' என்ற பெயரில் சில நிறுவனங்களை ஏற்படுத்தி அந்த நிறுவனங்களில் பயிற்சிபெறும் மாணவர்களை, பட்டதாரிகளுக்குச் சமமாக ஏற்குமாறு நிர்ப்பந்திக்கும் போக்கு காணப்படுகிறது.

காசி, அலிகார், விசுவபாரதி, டில்லி போன்ற ஏராளமான பல்கலைக்கழகங்கள் மத்திய அரசின் நேரடி ஆதிக்கத்தில் இருந்து வருகின்றன. திடீர் திடீரென்று புதிதாக வேறு இத்தகைய பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவை நன்ருக நடைபெற்றுவருவதாக இருந்தால் இவற்றைப்பற்றி விசாரணைக் குழுக்களை ஏற்படுத்த அவசியம் ஏன் வந்தது!

பல்கலைக்கழகங்களில் கல்வியின் தரம் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது பல்கலைக்கழக மானியக் குழுவின் பணியாகும்.

மத்திய பல்கலைக்கழகங்களுக்கு மானியக் குழு, நூறு சதவிகித மானியம் அளித்துவருகிறது; ஆனல் மாநில பல்கலைக்கழகங்களுக்கோ, பல்கலைக்கழகங்களிடமிருந்தும் மாநில அரசுகளிடமிருந்தும் நிதி வசதிகள் எதிர்பார்க்கப்பட்டு, குறைந்த அளவிலேயே மானியம் அளிக்கப்படுகிறது.

"மத்திய பல்கலைக்கழகங்கள் என்ன கேட்டாலும், மறு பேச்சின்றி அவை கொடுக்கப்பட்டு விடுகின்றன" என்பதே, மானியக் குழுவின் உறுப்பினர் என்ற வகையில் என்னுடைய அனுபவம்! அப்படியிருந்துங்கூட, உயர் கல்வியைப் பரப்பும் பணியில் அவை முன்னணியில் விளங்குகின்றனவா?

ஏராளமான நிறுவனங்களை, 'தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை'யாக அறிவிக்கும் போக்கும் வருத்தப்படக்கூடிய ஒன்ருகும்.

இவ்வாறு அறிவிக்கப்படுவதன் விளைவாக இந்த நிறுவனங்களின் தன்னுதிக்க உரிமையில் தலையீடு ஏதுமின்றியே பல்கலைக் கழகங்களுக்கு சமமாக அதற்குப் பட்டங்களை வழங்கிவர முடியும்.

புதிய பல்கலைக் கழகம் ஒன்றை துவங்க வேண்டுமெனில், எத்தனையோ பரிசீலனைகள் நடக்கின்றன' எத்தனையோ நிபந்தனைகள் நிறைவு செய்தாக வேண்டியிருக்கிறது; எத்தனையோ ஒப்புதல்களைப் பெற்ருக வேண்டியிருக்கிறது; ஆனல், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களுக்கு இந்த முன்னேற்பாடுகள் ஏதுமின்றி, அரசு மசோதா கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலம், அங்கீகாரம் கிடைத்துவிடுகிறது.

பல்கலைக் கழகங்களில் உயர் படிப்புச் சொல்லித் தருவதற்கு இந்தக் கொள்கை எந்த அளவுக்கு ஊக்கமளிக்கிறது என்பதைப் பொதுமக்களே முடிவு செய்து கொள்ளட்டும்.

சமூகத்தில் ஆசிரியர்களின் மதிப்பு முன்பிருந்தது போல இல்லை! அவர்களுக்கு முன்பிருந்த மதிப்பும் மரியாதையும் இல்லை! அரசியல்—சமூகம்—பொருளாதாரம்—என்று இப்படி, எண்ணற்ற பல சக்திகளின் தயவில் அவர்கள் இருந்துவர வேண்டியிருக்கிறது!

அப்போதெல்லாம் மக்கள் வாழ்க்கை நடத்தவேண்டியது எப்படி என்பதை ஆசிரியர்கள் போதித்து வந்தார்கள்; ஆனல் இப்போதோ, அதிகாரத்திலுள்ளவர்கள் ஆசிரியர்களுக்குப் போதனை செய்ய முயன்றுவருகிருர்கள்!

16 ஆண்டு சுதந்தர ஆட்சிக்குப்பின் கல்வித் துறையில் உள்ளவர்கள் நிலை இப்படியாகிவிட்டது! கல்வித் துறையினர் தலைதூக்க முடியாதவாறு கல்வியின் அடிப்படைக் கொள்கைகளே தாக்கப்படுகின்றன!"

—இவ்வாறு, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. ஏ. இலட்சுமணசாமி அவர்கள், சென்னை கிறித்துவக் கல்லூரி 72-வது ஆண்டு விழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டினர்.

○

**சேலம் நகராட்சியின் சீரிய பணி!**

# இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு!

## கழக உறுப்பினர் தீர்மானம் நிறைவேறியது.

——(0)——

29—8—93 காலை 10 மணிக்கு சேலம் நகராட்சி மன்றக் கூட்டம் தலைவர் திரு. ஆர். இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது கழக உறுப்பினர் பி. எஸ். மாணிக்கம் பின்வருமாறு ஓர் தீர்மானத்தை முன்மொழிந்தார்:—

மும்மொழிக் கொள்கைப்படி சிறுவர்கள் மூன்று மொழிகளைப் பயின்ருக வேண்டும்; மொழியைப் பயில்வதோடு அவர்கள் அறிவு நின்றுவிடுமானல் பாடங்களில் பயிற்சி குறைந்துவிடும்.

முன்பு இரண்டு மொழிகள் மட்டுமே இருந்ததால் சிறந்த அறிஞர்கள் தமிழ்நாட்டில் தலையெடுத்தனர். கல்வியின் தரமும் கூடுதலாக இருந்தது. தற்பொழுது மூன்று மொழிகளைக் கற்க வேண்டும் என்று கூறப்படுவதற்குப் பதில், இந்தியை நீக்கி, தமிழ்—ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளை மட்டுமே பயிலச் செய்யலாம் என்று அரசினரைக் கேட்டுக்கொள்ளலாம்.

இத்தீர்மானம் நிறைவேறியது. மேற்படி தீர்மானத்திற்கு 9 காங்கிரசு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

# தலையங்கம்

மலர். 17. 7—9—63 மாலை 4

# நன்றி கொன்ற செயல்!

—)—●—(—

[ என். வி. என். ]

இலங்கை மலைப் பகுதியிலுள்ள பண்டாரவிளை என்னும் நகரில் தி. மு. கழகத்தினர் உள்ளிட்ட தமிழர்களை சிங்கள குண்டர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர். தமிழ்ப் பெண்களையும் குழந்தைகளையும்கூட அவ்வெறியர்கள் தொல்லைகளுக்குள்ளாக்கியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. இதில் மேலும் கொடுமை என்னவென்றால் இந்தச் சம்பவம் நடந்து ஐந்தாறு நாட்கள் சென்ற பிறகே செய்தி வெளியாகியிருக்கிறது. அதுவரை இச்செய்தி இருட்டடிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது.

அதுவும் இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் பல கேள்விகளை எழுப்பிய பிறகுதான் இவ்வித சம்பவம் நடைபெற்றது உண்மை என்று திருமதி பண்டார நாயகா ஒப்புக்கொண்டிருக்கிறார்.

பண்டாரவிளை என்பது சிறந்த ஆரோக்கிய நிலையம். அங்கு வாழ்பவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். ஒருநாள் தி. மு. கழகக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்கு முன்பாக ஊர்வலமும் நடைபெற்றது. இவைகளுக்கு முறைப்படி போலீசாரும் அனுமதியளித்துள்ளனர். கூட்டம் அமைதியாக முடிந்து வீட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்த கழக ஆதரவாளர்கள்மீது சிங்களவர் சிலர் கற்களை வீசியும் அவர்களைப் பிடித்து அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்களென்றும் கழகத் தோழர் மாரிமுத்துவின் கார் ஒன்றின்மீது மண்ணெண்ணெய் கொட்டி தீவைத்துவிட்டனரென்றும் செய்திகள் மூலம் வெளியாகியிருக்கிறது. இந்நிகழ்ச்சியையொட்டி மண்ணெண்ணெய் புட்டிகளை வைத்திருந்த கிரில் பெரீரா என்பவரைப் போலீசார் கைதுசெய்து காவலில் வைத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இச்செய்திகளைக் கேட்டு நாம் பெரிதும் மனவேதனையடைகிறோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு டெல்லி ஆட்சிபீடம் நல்ல எண்ணத்துடன், குறித்த காலத்தில் தீர்வு கண்டிருந்தால் தமிழ்ப் பெருங்குடி மக்கள் இலங்கையில் இவ்வித கொடுமைகளுக்கு ஆளாகவேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டிருக்காது. இந்திய அரசின் போக்கை நாம் மாற்றாந்தாய் மனப்பான்மைக்கும், மந்தநிலைக்கும் ஒப்பிட்டுக் கண்டித்தால், நம்மீது சீறிப்பாயும் தேசீயத் தோழர்கள் இனியாவது அரசியல் விவேகத்துடன் சிந்திக்கவேண்டும். இலங்கையில் வடநாட்டவர்களுக்கு இதுபோல கொடுமைகள் அவ்வப்போது ஏற்பட்டிருக்குமானால், டெல்லி ஆட்சிபீடம் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்குமா? அல்லது சம்பந்தப்பட்ட மாநில அரசுகள்தான் வாய்ப்பொத்திக் கிடக்குமா என்பதை தமிழ்நாட்டிலுள்ள தேசீயத் தோழர்கள் மனிதாபிமானத்துடன் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். அதுபோலவே தமிழ் மாநில அரசும் இலங்கைத் தமிழ் மக்களின் தன்மானத்திற்கு இழுக்கு நேர்ந்தால் அது தமிழகத்திலுள்ள அனைவருக்கும் ஏற்பட்ட இழிவு என்ற உணர்வுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினையைச் சிந்தித்து அதற்கேற்ப தீர்வுகாண இந்திய அரசை வலியுறுத்தவேண்டும். எனவே இலங்கைத் தமிழர்கள் அடிக்கடி இதுபோன்ற அவலநிலைக்கு ஆளாகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் டெல்லி ஆட்சிபீடத்தினரின் கவலையற்ற போக்குதான் என்றால் அது தவறாகாது என்று எண்ணுகிறோம்.

அரசியல் வேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்வதென்றால் அதற்கு பலாத்காரம்தான் வழிவகையென்று யார் எண்ணினாலும் அவர்கள் இந்தக் காலத்தின் தீர்ப்பை உணரும் விவேகமற்றவர்கள் என்றே கூறுவோம். எந்த ஒரு பிரச்சினையானாலும் அதை பலாத்காரத்தால் வெற்றிபெறச் செய்துவிடலாம் என்று எண்ணுவதானது பைத்தியக்காரத்தனம் என்பது மட்டுமல்லாமல், இறுதியாக தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொண்ட விபரீதத்தை எண்ணியெண்ணி வருந்த வேண்டிய பரிதாப நிலைக்குத்தான் வந்துமுடியும்.

எனவே அரசியல் ஆதிக்கத்தைப் பலாத்காரத்தால், கலவரத்தால், குழப்பத்தால் பெற்றுவிடலாம் என்ற தப்புக்கணக்கில் இனியாகிலும் ஈடுபாடு கொள்ளவேண்டாம் என்று சிங்கள வெறியர்களுக்கு அறிவுறுத்துகிறோம்.

இலங்கையின் இன்றைய தலைநிமிர்ந்த வாழ்வுக்குத் தங்களின் பேருழைப்பைத் தந்த தமிழர் சமுதாயத்தை, இரத்தம் சிந்திய தமிழ்ப் பெருங்குடி மக்களை சிங்கள வகுப்பைச் சார்ந்த சிலர் கொடுமைப்படுத்துவது நன்றி கொன்ற செயலாகும். சிங்கள—தமிழ் மக்களிடையே நிலவிவரும் சாதாரண உறவைக்கூட குண்டர்களின் போக்கு சீரழித்துவிடும் என்பதை இனியாகிலும் நினைவில்கொண்டு நேர்மையுடன் நடக்குமாறு சிங்கள வெறியர்களுக்கு அறிவுறுத்துகிறோம்.

இலங்கையிலுள்ள சிங்களச் சமுதாயத்தினர் அனைவருமே, இலங்கைத் தமிழர்கள்மீது வெறுப்பு கொண்டுள்ளனர் என்று நாம் கூறவில்லை. ஆனாலும் சிங்களச் சமுதாயத்தைச் சேர்ந்த சில குண்டர்கள் இவ்வித அக்கிரமங்களில் ஈடுபடுவதானது சிங்களச் சமுதாயத்திற்கே இழிவைத் தேடித் தருவதாகும். எனவே இலங்கையிலுள்ள சிங்களச் சமுதாய மக்களும் அச்சமூகப் பெரியவர்களும் எதிர்காலத்தில் குண்டர்களால் இதுபோன்ற அநீதிகள் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு ஏற்படாத வகையில் ஆவனசெய்ய முன்வர வேண்டுகிறோம்.

அதுபோலவே இந்திய அரசினர், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தீர்வுகாணுவதற்கு மேலும் காலத்தைக் கடத்தாமல் அரசியல் விவேகத்துடனும் நியாய உணர்வுடனும் நடக்க முன்வரவேண்டும். இலங்கையிலுள்ள தி. மு. கழகம் அவ்விடத்திய அரசியலாரின் அனுமதியுடன், அதுவும் அந்நாட்டின் சட்டதிட்டத்திற்கேற்ப இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில் இலங்கை தி. மு. கழகத்தின்மீது காழ்ப்புகொண்டு சிலர் கோயபல்ஸ் பாணியில் வீண்புரளிகளைக் கிளப்பிக் குழப்பத்தை உண்டாக்குவதாகவும் தெரிகிறது. இதுபோன்ற செயல்களால் அரசியல் அறத்தை—நேர்மையை வெல்லமுடியாது என்பதை இலங்கையிலுள்ள கோயபல்ஸ்கள் உணர்ந்து நடக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

---

## வருந்துகிறோம்

தொழிலாளர் இயக்கத் தலைவர் தோழர் குருசாமி அவர்கள் சென்னையில் 2—9—63 அன்று இயற்கையெய்திய செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறோம். தமது பொதுப் பணியை தொழிலாளர் நலனுக்காக அர்ப்பணித்து வந்த அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## பாசறை மாநாடுகள்

### கலைஞர் கருணாநிதி அறிவிப்பு

இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்கள் சேர்க்கும் பொறுப்பினையேற்று, மாவட்டச் செயலாளர்கள் அல்லது மாநில அமைப்பாளர்களிடம் பட்டியல் தாள்களைப் பெற்றிருக்கும் தோழர்கள் செப்டம்பர் 15ம் நாளுக்குள் தங்கள் பணியினை முடித்து பட்டியல்களை மாவட்டச் செயலாளர்கள் அல்லது அமைப்பாளர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

போராட்டத்தில் ஈடுபடுகிற தோழர்களும், ஈடுபடுபவர்களை அணுகிப் பட்டியலில் பெயரைப் பதிவு செய்கிற பொறுப்பேற்றிருப்பவர்களும் செப்டம்பர் 15ம் தேதிக்குள் தங்கள் பணியினை விரைந்து நிறைவேற்றினால்தான், சென்னை இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குள் நானும், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் மேற்கொள்ளுகிற சுற்றுப்பயண நிகழ்ச்சிக்கான திட்டங்களை வகுக்கவும், இறுதிப் பட்டியலைத் தயாரிக்கவும் வசதியாக இருக்கும்.

எங்கள் சுற்றுப்பயணத்தின் போது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள எல்லா இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களையும் சந்திக்கிறோம். அதற்கு வசதியான முறையில் மாவட்டங்களை வட்ட ரீதியாக இரு பகுதிகளாகப் பிரித்து காலை 9 மணிக்கு ஒரு இடத்திலும், மாலை 5 மணிக்கு வேறோர் இடத்திலும் பாசறை மாநாடுகள் நடைபெறுகின்றன.

அந்தப் பாசறை மாநாடுகளில் பட்டியலில் பெயரைப் பதிவு செய்துகொண்ட தோழர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். மாநிலங்களில் பாசறை மாநாடுகள் ஒரே இடத்தில் மட்டுமே நடைபெறும்.

அந்தந்த மாவட்டங்கள்-மாநிலங்களில் போராட்ட வீரர்களின் பாசறை மாநாடு எந்த இடத்தில் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்ற விவரங்களை மாவட்டச் செயலாளர்களும், மாநில அமைப்பாளர்களும் செப்டம்பர் 15ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக்கக வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

போராட்டத்திற்கான இறுதிப் பட்டியலைத் தயாரிக்கும் வகையில் இந்தப் பாசறை மாநாடுகள் அமையுமாதலால் அதற்கு ஏற்ற முறையில் செப்டம்பர் 15க்குள் பட்டியல்களை நிறைவு செய்து அனுப்பிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கருநாடகத்தில்

## ஆட்சிமொழியாக கன்னடம்--
## தொடர்பு மொழியாக ஆங்கிலம்!

—[0—0]—

கருநாடக மாநிலத்தில் கன்னடத்தை ஆட்சிமொழியாக்க கருநடாடக மாநில அரசு முன்வந்துள்ளது. இதற்கான மசோதாவை அரசு வெளியிட்டுள்ளது.

அரசு வேறுவிதமாக முடிவு செய்யும்வரை, அரசாங்க அலுவல்களுக்கு ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்கும் என்றும் மசோதாவில் வரையறுக்கப்பட்டுள்ளது. மாநில சட்ட மன்றத்திலும் ஆங்கிலமே நீடிக்கும்.

# தி. மா. மு. கழக இந்தி எதிர்ப்பு சிறப்பு மாநாடு

——(0)——

## செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் அறிக்கை

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தி எதிர்ப்பு சிறப்பு மாநாடு வரும் அக்டோபர் திங்களில் திருச்சியில் நடைபெறும். அந்த மாநாட்டில் அறிஞர் அண்ணு அவர்களும் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வருகின்ற அக்டோபர் திங்களில் இந்தி எதிர்ப்பு கிறப்பு மாநாடு திருச்சியில் நடைபெற இருக்கிறது. அந்த சிறப்பு மாநாட்டில் நமது பேரறிஞர் அண்ணு அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க இருக்கிருர்கள்.

இடையே உள்ள குறுகிய காலத்தில் பல செயல்களை செய்ய வேண்டியிருப்பதால், தலைமைக் கழகத்திலிருந்து விண்ணப்பத் தாள்களை பெற்று மாணவக் கிளைகள் அமைக்க காலதாமதம் ஏற்படும் ஆகையால், மாணவ நண்பர்கள் 20—9—63-க்குள் தற்போது இயங்குகின்ற மாணவர் கிளைகளை புதுப்பித்தும், மாணவர் கிளைகள் இல்லாத இடங்களில் புதிய அமைப்புக்களை அமைத்தும், அதன் விவரத்தை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன். விண்ணப்பங்களுக்காக காத்திருக்க வேண்டாம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

பொதுச்செயலாளர், தி. மா. மு. க:

126. மவுண்ட் ரோட், சென்னை-6.

முதல் பக்கத் தொடர்ச்சி………

முணுமுணுத்துக் கொண்டிருந்தனராம்!

இப்போது அந்த முணுமுணுப்பு சிறிது சிறிதாக வளர்ந்து காமராசர் திட்டத்துக்கு எதிர் திட்டம் என்ற அளவில் உருவாகி விட்டதாம்! அதற்கேற்பவே லால் பகதூர் சாஸ்திரி காங்கிரஸ் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஒரு புதிய திட்டத்தைத் தந்திருக்கிருர்.

காமராசர்—லால்பகதூர் பலப் பரீட்சை எங்கு போய் முடியுமோ யென்று காங்கிரஸ் மேலிடத்திலேயே கவலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது!

லால்பகதூரின் எதிர்திட்டம் இது தான் :—

கட்சியை சீர்படுத்த பாராளு மன்றக் குழு தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்திந்திய காங்கிரஸ் குழு வகுக்கும் கொள்கைகளையும் திட்டங்களையும் மாநிலக் குழுக்கள் செயல்படுத்தும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாநிலக் குழுவில் அற்ப காரியங்களுக்காக சண்டை சச்சரவு ஏற்படுவதையும் ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வதையும் தடுக்க வேண்டும்.

எம். எல். ஏ. க்கள், எம்.பி.க்கள் நடவடக்கைகளைக் கண்காணித்து வரவேண்டும்.

தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அந்தந்தத் தொகுதிகளில் மேற்படி வேட்பாளர்கள் செய்துள்ள தொண்டுகள், அவர்களுக்குள்ள செல்வாக்கு, கட்சிக்காக அவர்கள் ஆற்றியுள்ள பணிகள் ஆகிய இவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

நிர்வாகத்தில் கட்சியினர் தலையிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.




தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை


3-ம் பக்கத் தொடர்ச்சி

தாலே காங்கிரசுக்காரர்கள் முக்காடு போட்டுக்கொள்கிருர்களே!

நாடெங்கும் கவர்னர் பதவிகளுக்காக ஆண்டொன்றுக்கு சுமார் 2-கோடி ரூபாய் செலவிடப்படுகிறதாம். இப்பதவி எடுக்கப்படுமானல் இத்தொகை மிச்சமாகும். மண்ணெண்ணெய்க்கு வரி உயர்த்தியதன்மூலம் சர்க்கார் இன்று பெறும் சுமார் 2-கோடி ரூபாயை இதிலிருந்து சரிசெய்து கொள்ளலாம் அல்லவா? ஏழை மக்கள் விளக்கேற்றுவதற்கு விதிக்கப்படும் வரியை குறைக்கலாம் அல்லவா? நாம் சொல்லும் அந்தக் கருத்துக்கள் ஆட்சியினர் செவியில் நுழையுமா?

''நேரு சாதி வெறிபிடித்தவர்; தன் சாதியைச் சேர்ந்தவர்களுக்கும், தனது குடும்பத்தினருக்கும் பதவிகள் வழங்குவதில் சலுகை காட்டுகிருர். நாட்டு மக்கள் இன்று படும் இன்னல்களுக்கெல்லாம் நேருதான் காரணம். இவருக்காக நாள் ஒன்றுக்கு 25,000 ரூபாய் செலவழிக்கப்படுகிறது'' என்று கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கிருர் டாக்டர் லோகியா.

சரியோ, தவருே சொன்னதை விடாப்பிடியாக சொல்லும் துணிச்சல் மிக்கவர் லோகியா. ஆனலும் மக்கள் சபையில் அவர் உதிர்த்த இந்த மணிவாசகங்களை மறுக்கவில்லை, மொரார்ஜியும்—மற்றவர்களும்! கேலி பேசியிருக்கிருர்கள்! கிண்டல் செய்திருக்கிருர்கள்!

சொல்வது யார் என்ற ஆராய்ச்சி தேவையில்லை. சொல்லப்படும் கருத்தில் உண்மை இருக்கிறதா என்ற கண்டுபிடிப்புதான் நல்ல மக்களாட்சி மரபுக்கு வழிகாணும்! அதை உணர்ந்தவர்களாக இல்லையே அமைச்சர்கள்! என்ன செய்வது?

''அலகாபாத் பண்டிதர் குடும்பத்துக்கு பட்டமும், பதவிகளும் பரம்பரைச் சொத்தா?'' என்ற லோகியாவின் கேள்வி, சிந்தனைக்குரியதுதான்!

நாட்டில் இன்று 27 கோடி மக்கள் நாள் ஒன்றுக்கு மூன்றணு வருமானத்தில் வாழ முயன்று கொண்டிருக்கிருர்களாம்! ஆனல் அதே நேரத்தில் ஒரு வர்த்தகக் குடும்பத்துக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு மூன்று லட்சம் ரூபாய் வருமானம் வந்துகொண்டிருக்கிறதாம் இருக்கலாமா இத்தனை பெரிய ஏற்றத் தாழ்வு என்பீர்கள்! என்ன செய்வது? மூன்றணுவில் வாழ்வோரின் பிரதிநிதிகளா ஆட்சியில் இருக்கிருர்கள்? மூன்று லட்சங்களின் பிரதிநிதிகளல்லவா கொலுவீற்றிருக்கிருர்கள்? லோகியாவின் பேச்சு அவர்கள் செவியில் ஏறுமா?

நம் அண்ணாவின் அருமைச் செல்வங்கள்

# பரிமளம்-சரோஜா இளங்கோவன்-விஜயலட்சுமி திருமண விழா

## பல்லாயிரவர் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்

அறிஞர் அண்ணா அவர்களின் மூத்த மகன் செல்வன் பரிமளத்திற்கும், மாயவரம் சவுரிராசனார் மகள் செல்வி சரோஜாவிற்கும்; இளைய மகன் செல்வன் இளங்கோவனுக்கும், பேரளம் குஞ்சிதபாதனார் மகள் செல்வி விஜயலட்சுமிக்கும் 1—9—63 அன்று காஞ்சியில், அ. க. தங்கவேலர் (எம்.எல்.சி.) கருத்தரங்குச் சோலையில் திருமணம் சீரும் சிறப்புமாக நடந்தேறிற்று.

31—8—63 இரவு 7 மணிக்கு மணப்பெண்களை வரவேற்று கலைச்செல்வரான காருகுறிச்சி அருணாசலம் அவர்கள் குழுவினரின் நாதசுர இசையுடன் ஊர்வலம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான தாய்மார்களும்—தோழர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திருமணத்தை யொட்டி காஞ்சி நகரமும் கருத்தரங்கச் சோலையும் விழாக்கோலம் பூண்டிருந்தது என்று கூறின் மிகையாகாது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் ஆந்திர-கேரள கருநாடக மாநிலங்களிலிருந்தும் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், மாணவத் தோழர்களும் கலைத்துறையினரும் மாற்றுக் கட்சி நண்பர்களும் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் மணவிழாவிற்கு வருகை தந்தனர். மணவிழா மாநாட்டினைப்போன்ற காட்சியை அளித்ததென்று கூறுவதே மிகப் பொருத்தமாகும்.

மணவிழா 1—9—63 காலை 9-45 மணிக்குத் துவங்கியது. அறிஞர் அண்ணா அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றி சேலம் மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் பேளுகுறிச்சி ஜி. பி. சோமசுந்தரம் அவர்களை தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார். அதனை வழிமொழிந்து புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பேசினார்.

விழாத்தலைவர் ஜி. பி. சோமசுந்தரம் அண்ணாவின் குடும்பத்தில் நடைபெறும் இந்திருமணத்தின் சிறப்பை எடுத்துக்கூறினார்.

அடுத்தபடியாத செல்வன் பரிமளம் செல்வி சரோஜா ஆகியோர் திருமணமும், தொடர்ந்து செல்வன் இளங்கோவன்-செல்வி விசயலட்சுமி ஆகியோர் திருமணமும் இனிது நடந்தது.

அடுத்தபடியாக தி. மு. க. தலைமைக்கழக சார்பில் தோழர் என். வி. நடராசன் அவர்களும், சென்னை மாவட்ட தி. மு. கழக சார்பில் நீலநாராயணன் அவர்களும், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக சார்பில் சி. வி. எம். அண்ணாமலை அவர்களும் மற்றும் காஞ்சி நகர தி. மு. கழக சார்பிலும், மத்திய தி. மா. மு. கழகம், சென்னை மாவட்ட தி. மா. மு. கழகம், மற்றும் நூற்றுக்கணக்கான கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள் ஆகியவைகளின் சார்பில் மணமக்களுக்கு வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

தொடர்ந்து பல அமைப்புக்களின் சார்பிலும், தனிப்பட்ட நண்பர்கள் சார்பிலும் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

மணமக்களை வாழ்த்தி திரு. ம. பொ. சிவஞானம் திரு. அப்துஸ்சமத் எம்.எ., கழக அவைத் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன், பொருளாளர் கலைஞர் மு. கருணாநிதி, செயலாளர்கள் கே. எ. மதியழகன், சத்தியவாணி முத்து, சி. பி. சிற்றரசு, எ. கோவிந்தசாமி, பேராசிரியர் க. அன்பழகன், நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமசந்திரன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், வழக்கறிஞர்கள் கடலூர் இளம்வழுதி, தில்லை-வில்லாளன், சிதம்பரம் சாமிநாதன் ஆகியோரும், மன்னை நாராயணசாமி, அம்பில் தருமலிங்கம், இரா. சாம்பசிவம், மதுரை எஸ். முத்து, சேலம் மெய்யப்பன் எம்.சி., திருச்சி ராபி, சட்டமன்ற தி. மு. க. உறுப்பினர்கள் தங்கவேலு, முனிரத்தினம், கலீல், கமலநாதன், மேயர் குசேலர், முன்னாள் மேயர்கள் வி. முனுசாமி, அ. பொ. அரசு; அலமேலு அப்பாதுரை, பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. தருமலிங்கம், அரூர் முத்து, அ. க. தங்கவேலர் எம்.எல்.சி., சி. வி. இராசகோபால், ஜக்கையா, சித்தூர் நரசிம்மலு, எம்.எல்.சி. கிருஷ்ணசாமி ஆகியோரும் மற்றும் பல அன்பர்களும் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

நடிகவேள் எம். ஆர். இராதா, பி. எஸ். வீரப்பா, ஆனந்தன், ஓ. ஏ. கே. தேவர், சந்திரபாபு, வளையாபதி முத்துகிருட்டிணன் உள்ளிட்ட கலைத்துறையினர் பலர் வந்திருந்தனர்.

வந்திருந்த அனைவருக்கும் விருந்து அளிக்கப்பட்டது.



### எனது நன்றிகலந்த வணக்கம்.

—(0)—

என் மூத்த மகன் செல்வன் பரிமளத்திற்கும், செல்வி சரோசாவிற்கும்; இளைய மகன் செல்வன் இளங்கோவனுக்கும் செல்வி விசயலட்சுமிக்கும் காஞ்சியில் அ. க. தங்கவேலர் கருத்தரங்குச் சோலையில் 1—9—63 அன்று நடைபெற்ற திருமண விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அன்பர்கள், தாய்மார்கள். கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், கலைத்துறையினர், மாற்றுக்கட்சி நண்பர்கள் ஆகியோருக்கும், வாழ்த்துரை வழங்கிய அன்பர்கள், வாழ்த்திதழ்கள், அன்பளிப்புகள் வழங்கிய தோழர்கள் ஆகியோர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய நண்பர்களுக்கும், இசை நடன விருந்தளித்த கலைஞர்களுக்கும், மணவிழா இனிதே நடைபெறும் வகையில் அமைப்புப் பணிகளை நிறைவேற்றித் தந்த தோழர்களுக்கும், அமைதி காத்துத் தந்த காவல் துறையினருக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சி
2—9—63

அன்பன்,
**அண்ணாதுரை**

### காருகுறிச்சியாருக்கு பட்டம்

பிற்பகல் 4-மணியிலிருந்து இசை விருந்துகள் அளிக்கப்பட்டன.

முதலாவதாக மாலை 4மணிக்கு திரு. காருகுறிச்சி அருணாசலம் அவர்களின் நாதஸ்வர இசை நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது. தவுல் வித்வான்கள் நீடாமங்கலம் இரகாவப்பிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம் தவுல் வாசித்துச் சிறப்பித்தனர். சுமார் 2-மணி நேரம் இந்நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது. காருகுறிச்சியின் அபார திறமையைப் பாராட்டியும் திருமண விழாவில் கலந்துகொண்டதற்கு நன்றிதெரிவித்தும், அண்ணா அவர்கள் அவருக்கு **நாதரத்னம்** என்ற சிறப்புப்பட்டத்தை வழங்கினார்.

### நடன விருந்து!

இரவு 7-மணிக்கு திரையுலகப் புகழ் எல். விஜயலட்சுமியின் நடன விருந்து நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது. அண்ணா அவர்கள், விஜயலட்சுமியையும் அவரது குழுவினரையும் பாராட்டி நன்றி செலுத்திக்கொண்டார்.

### இசைச்சித்தர்

இரவு 9-30 மணிக்கு இசைச்சித்தர் சிதம்பரம் ஜெயராமன் அவர்களின் இசை விருந்தும் இனிதே நடைபெற்றது. இவருக்குப் பக்கத்துணையாக வயலின், மிருதங்கம், கடம் மோர்சிங் ஆகியவைகளை வாசித்துச் சிறப்பித்த கலைஞர் பெருமக்களும் பாராட்டு தலைப் பெற்றனர். அண்ணா அவர்கள் செயராமன் குழுவினருக்கும் ஏனையோருக்கும் இறுதியாக நன்றியும் வணக்கமும் கூற இரவு 12-30 மணிக்கு திருமண விழா சிறப்புற முடிவுற்றது.

### ஏஜெண்டுத் தோழர்களுக்கு

———

வணக்கம்,

ஆகஸ்டு மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவறாது அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி: 'திராவிடன்'

பதிவு எண்: 7178 திராவிடன் தொலைபேசி 33581



# அண்ணாவுடன் நான்



## தி. மு. க. துவக்கம்

### 22

பெரியார்—மணியம்மை திருமணத்திற்குப் பிறகு, திராவிட கழகப் பணியில் பெரியார் அவர்களின் தொடர்பிலிருந்து விடுபட்ட அறிஞர் அண்ணா அவர்கள் உள்ளிட்ட முக்கிய தோழர்கள் அனைவரும் அடுத்து என்ன செய்வது என்பதைப்பற்றி அவ்வப்போது கூடிக்கூடிக் கலந்து பேசிவந்தோம். ஆனால் எவ்வித முடிவும் ஏற்படவில்லை. உடனடியாக வேறு கட்சியை அமைத்துப் பணியாற்றவேண்டும் என்று எல்லோரும் ஒருமனதாகக் கூறிவந்தோம். அண்ணா அவர்களுக்கும் இது உடன்பாடுதான். என்றாலுங்கூட அண்ணா நிதானம் காட்டி வந்தார்; இது எங்களுக்குப் பிடிக்கவில்லை.

ஒருநாள் சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள, தோழர். டபிள்யூ. கே. தேவராசனார் இல்லத்தில் நாங்கள் அனைவரும் அண்ணாவைச் சந்தித்து வற்புறுத்தினோம். அவர் வழக்கம் போலவே நிதானமாக பதிலளித்தார். அதுமட்டுமல்லாமல், எத்தனை பேர் உறுதியாயிருக்கிறார்கள் என்பதைச் சற்று பொறுத்திருந்து பார்ப்பதில் ஒன்றும் கெட்டுவிடாது என்றெல்லாம் சொன்னார்!

பெரியாரை எதிர்த்து அண்ணா புதிய கட்சி ஆரம்பிக்கமாட்டார் என்ற ஐயப்பாட்டை அண்ணாவின் பேச்சு உண்டாக்கிவிட்டது. அப்படி ஐயப்பாடு கொண்டவர்களில் முதன்மையானவர் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள்! (விடுதலை அலுவலகத்தின் காஷியராகவும் சென்னை மாவட்ட திராவிட கழகத்தின் செயலாளராகவுமிருந்தவர்)

அண்ணாவின் திட்டப்படியே விட்டுவிடுவோம் எப்படியும் நமது அனைவரின் விருப்பத்தையொட்டித்தான் நடப்பார். சற்று பொறுத்திருப்பதில் ஒன்றும் தீமை ஏற்பட்டுவிடாது என்று நான் கூறினேன்! நண்பர் கே. கோவிந்தசாமிக்கு எனது பதில் சரியென்றுபடவில்லை போலும்!

நண்பர்களின் எண்ணத்தையெல்லாம் அண்ணாவிடம் நான் அவ்வப்போது கூறிவந்தேன். என்றாலும் பயன் இல்லை. பெரியாரை விட்டுவிலகி ஏறத்தாழ நான்கு திங்கள்கள் ஆகிவிட்டன. மேலால் எவ்வித முயற்சியும் இல்லை. அடிக்கடி சென்னையில் தேவராசனார் இல்லத்தில் கலந்து பேசுவதோடு கதை முடிந்துவிடும்.

பெரியாரை எதிர்த்து ஒரு காரியமாற்றுவதில் எப்போதுமே விரும்பாத அண்ணா புதிய கட்சியையா ஆரம்பிக்கப் போகிறார் என்று சில தோழர்கள் வெளிப்படையாகவே பேசிவந்தனர். நான் அவர்களின் எண்ணத்தை ஒப்புக்கொண்டாலுங்கூட அண்ணா அவர்களின் தலைமையில் பணியாற்றயிருக்கும் நாம் அவருக்கு விருப்பமில்லாத வகையில் அவசரப்படுவது முறையாகாது என்றும், தாமதத்தால் ஏற்படும் நன்மை தீமைகளில் அண்ணாவுக்கு நம்மைவிட பொறுப்பு அதிகமாகுமென்றும் எனவே அவசரப்படவேண்டாம் என்று கூறிவந்தேன்.

நான் ஆசிரியராயிருந்து நடத்திவரும் 'திராவிடன்' அப்போது மூன்றாவது ஆண்டுப் பயணத்திலிருந்தான். வாரந்தோறும் அது வெளிவரும்.

ஒரு நாள் நண்பர்கள் கே. கோவிந்தசாமி, காஞ்சி மணிமொழியார் ஆகியோர் என்னைத் தேடி, திராவிடன் அலுவலகத்திற்கு வந்தனர். அப்போது நான் இல்லை.

இந்த வாரம் திராவிடன் பத்திரிகை தயாராகிவிட்டதா?—கே. கோவிந்தசாமியின் கேள்வி.

இன்னும் ஒரு மணி நேரத்தில் பாரம் தயாராகிவிடும்—அச்சகத்தார்.

முக்கியமான செய்தி ஒன்று வெளியிட வேண்டும் அதற்குச் சற்று இடம் இருக்கிறதா?—கோவிந்தசாமியின் அடுத்த கேள்வி.

தாங்கள் சொல்லும்போது எப்படி இல்லையென்று கூறமுடியும்? எழுதிக் கொடுங்கள்!—அச்சகத்தார்.

“பெரியாரைவிட்டுவிலகிய கழகத் தோழர்களின் ஆலோசனைக் கூட்டத்தைவிரைவில்கூட்டுமாறு அண்ணாவை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். இல்லையெனில் நான் இன்னும் 15 தினங்களில் கூட்டுகிறேன். விவரம் அடுத்த வாரம். அன்பன், என். வி. நடராசன்”—கே. கோவிந்தசாமியும், மணிமொழியாரும் எழுதித்தந்தது.

ஆசிரியர் நடராசன் அனுமதியில்லாமல் அதுவும் அவர் பெயரால் இப்படி அறிக்கையை அதுவும் அவர் பத்திரிகையில் வெளியிடுவது சரியாகுமா? அச்சகத்தார் கேள்வி.

என் கையெழுத்து இருக்கிறதே—அவர் இஷ்டமில்லாமல் நான் எழுதித் தருவேனா? உங்களைக் கேட்டால் நாங்கள் பொறுப்பாளி பயப்பட வேண்டாம்—இது கே. கோவிந்தசாமி, காஞ்சி மணிமொழியார் ஆகியோரின் உருக்கமான பதில்.

இதற்குப் பிறகு அச்சகத் தோழர்கள் கட்சியின்முன்னணித் தோழர்களின் சொல்லை எப்படி புறக்கணிக்கமுடியும்? எனவே எனது இசைவை பெற்றே இவ்வாறு எழுதித்தருகிறார்கள் என்று எண்ணி அச்செய்தியை திராவிடன் வார இதழில் வெளியிட்டுவிட்டார்கள். அதாவது அச்சாகிவிட்டது. இவையனைத்தும் எனக்குத் தெரியாது. இவ்வாறு ஒரு அறிக்கை என் பெயரால் அதுவும் திராவிடன் பத்திரிகையில் வெளியிட வேண்டும் என்று தோழர் கே. கோவிந்தசாமியோ மணிமொழியாரோ விவாதிக்கக்கூடயில்லை.

அவ்வாரத்திய திராவிடன் இதழ் நான் வெளியூர் சென்றிருந்த முகவரிக்கு, திராவிடன் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது.

என் பெயரால் வெளிவந்துள்ள செய்தியைக் கண்டு திடுக்கிட்டேன். இவ்வாறு பொறுப்பற்ற முறையில் யார் செய்தி வெளியிட்டது, எழுதிக் கொடுத்தவர்கள் யார் என்றெல்லாம் கேட்டு திராவிடன் தோழர்களுக்கு மடல் தீட்டினேன். என்றாலும் என் மனம் நிம்மதியடையவில்லை. உடனே சென்னை புறப்பட்டு வந்தேன். விவரம் அறிந்தேன். தோழர் கே. கோவிந்தசாமியின்வீட்டுக்கு விரைந்து சென்றேன். அவரைக் கண்டதும் எனக்கு ஏற்பட்ட கோபத்திற்கு அளவேயில்லை.

அவர் நிதானமாக நடந்ததையெல்லாம் சொல்லி, எப்படியாவது நம் கொள்கை பாழாகாமலிருக்க விரைவில் அண்ணா அவர்கள் கட்சியைத் துவக்கவேண்டும் என்பதற்காகவே இந்த அறிக்கை உங்கள் சம்மதமின்றி உரிமையுடன் வெளியிட்டோம். இதற்காக அச்சகதோழர்களைக் கோபிக்காதீர்கள் என்று கூறினார்.

உங்கள் ஆர்வத்தை மதிக்கிறேன். அதற்காக நான்தான் கிடைத்தேனா, அண்ணா அவர்கள் இந்த அறிக்கையைக் கண்டால் என்னைப்பற்றி என்ன நினைப்பார்! எவ்வளவு வருத்தப்படுவார். இப்படி எனது விருப்பத்தை அறியாமல் என் பெயரில் அறிக்கை வெளியிட்டு என்னை பழி வாங்குவதைப்போல செய்யலாமா என்றெல்லாம் கோபித்துக்கொண்டேன்.

**என். வி. என்.**

இயக்க வளர்ச்சிக்காக உங்களைப்போன்றவர்கள் சில தொல்லைகளை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். உங்கள்மீது அண்ணா வருத்தப்படமாட்டார், நாங்கள் உண்மையைச் சொல்லுகிறோம் என்றெல்லாம் தோழர். கே. கோவிந்தசாமி சமாதானம் கூறினார். எனினும் என் மனது நிம்மதியடையவில்லை. அண்ணா நம்மைப்பற்றித் தவறாக அல்லவா எண்ணி வருந்துவார் என்று வேதனைப்பட்டேன்.

இந்நிலையில் 'திராவிடன்' இதழில் அச்செய்தியைக் கண்ட அண்ணா அவர்கள் மிகவும் வேதனைப்பட்டதாகவும் காஞ்சியிலிருந்து வந்த தோழர் சி. வி. எம். அண்ணாமலை என்னிடம் கூறினார். நான் கண் கலங்கினேன். பிறகு......

(அடுத்த வாரம்)

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1.